பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ [illegible] ★ [illegible] 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. [illegible]

மலர் : 20] சென்னை : ஆவணி 10 (26—8—72) சனி வெளியூர் : ஆவணி 11 (27—8—72) ஞாயிறு [இதழ் : 62

## வங்க அகதிகளுக்குச் செலவிட்டது எவ்வளவு ?

புதுடில்லி, ஆக. 26—

இந்தியாவுக்கு வந்த வங்க தேச அகதிகளுக்காகக் கடந்த மே 31-ந் தேதி முடிய மத்திய அரசு ரூ. 302 கோடி செலவிட்டிருக்கிறது.

இத்தகவலை, நாடாளுமன்றத்தில், அமைச்சர் காடில்கார் அறிவித்தார்.

"வங்க தேச அகதிகளுக்காக வெளிநாடுகள் ரூ. 198 கோடி உதவுவதாக வாக்களித்ததில் ரூ. 138.95 கோடி மட்டுமே கிடைத்துள்ளது" என்று அவர் கூறினர்.

# மத்திய அரசின் செலவினங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்

## ரூ. 9,382 கோடி நிர்வாகச் செலவின் நியாய அநியாயங்களை அறிய நிதிக் குழு முன்வருவது அவசியம்

### ஏராளமான செலவுகளைச் சிக்கனப்படுத்தினால்தான் மாநிலங்களுக்கு நிதி கிடைக்கக்கூடும்

### நினைத்த நேரத்தில் மத்திய அரசு ஊதிய உயர்வு அளிப்பதால் நம்மை ஒரு நச்சு வட்டம் சுற்றிக்கொண்டே இருக்கிறது -- சட்டமன்ற மேலவையில் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, ஆக. 26--

"மத்திய அரசின் செலவினங்கள் நிதிக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் ; அப்படி ஆய்வு செய்யப்படுவது வளர்ச்சியற்ற பணி இனங்களில் ஆகும் ஏராளமான செலவுகளைச் சிக்கனப்படுத்தவும் -- கட்டுப்படுத்தவும் இயலக்கூடியதாக இருக்கும் ; இதன் காரணமாக மிச்சமாகும் நிதியை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

"1967-ம் ஆண்டுமுதல் 1971 வரையில், வளர்ச்சியற்ற பணிகளுக்கான இனத்தின்கீழ் மத்திய அரசு ரூ. 9,382 கோடி செலவிட்டிருக்கிறது ; மத்திய அரசின பொது நிர்வாகம் -- பாதுகாப்பு -- கடனுக்கான வட்டி ஆகியவைகளுக்காக இந்தத் தொகை செலவிடப்பட்டிருக்கிறது ; 'பாதுகாப்புக்குச் செலவிட வேண்டாம்' என்று நான கூறவில்லை ; ஆனால், அந்தச் செலவுகளிலே இருக்கின்ற நியாய -- அநியாயங்களை அறிய நிதிக் குழு இந்தக் கணக்குகளையும் விசாரிக்க வேண்டும் எனக் கேட்டுக கொள்கிறேன்.

"மாநில அரசின் கணக்குகளை நிதிக் குழு பரிசீலிப்பதுபோல், மத்திய அரசின் கணக்குகளையும் பரிசீலிக்க வேண்டும் ; அப்படிச் செய்தால்தான், அதில் ஏற்படும் தேவையற்ற செலவுகள் மிச்சப்பட்டு -- அவை மாநிலங்களுக்குக் கிடைக்கக்கூடும்; அதன்மூலம், மாநிலத்தின் நிதி வருவாய் -- நிதி ஆதாரங்கள் மேலும் பலமடையக்கூடும்"

—என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சட்டமன்ற மேலவையில், 1972-ம் ஆண்டு நிதி ஒதுக்கல் மசோதாமீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார் ; அவர் மேலும் கூறியதாவது :—

"மத்திய அரசாங்கம் தனது ஊழியர்களுக்கு நினைத்த நேரத்தில் ஊதிய உயர்வு அளிக்கிறது ; இதைக் கண்டவுடன் மாநில அரசு ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரிப் போராட்டம் தொடங்குகிருர்கள்.

"நாம் ஊதியத்தை உயர்த்தும் நேரத்தில் விலைவாசி உயருகிறது ; விலைவாசி உயர்ந்ததன் காரணமாக மீண்டும் ஊதியததை உயர்த்த வேண்டியிருக்கிறது ; இப்படி ஒரு நச்சுவட்டம் நம்மைச் சுற்றிக்கொண்டே இருக்கிறது ; இதற்குக் காரணமாக இருப்பது மத்திய அரசுதான் !

"மத்திய அரசால் நியமிக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினர் தங்கள் அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளனர் ; அந்த அறிக்கையில், 'விலைவாசி உயர்வுக்கும — வாழ்க்கைத்தரப் புள்ளி உயர்வுக்கும் மத்திய அரசே காரணம்' என்று கூறப்பட்டிருக்கிறது.

"அதே அறிக்கையில், 'மத்திய அரசாங்கம் தன் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கும்போது மாநில அரசு ஊழியர்களின் ஊதியத்தையும் உயர்த்த மாநிலங்களுக்குப் பண உதவி செய்யவேண்டும்' என்றும் கூறப்பட்டிருக்கிறது !

"இந்தக் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு செயல்படுத்தவில்லை ; அதைச் செயல்படுத்த வேணடும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"நாம் அரசு ஊழியர்களுக்கு அளித்த ஊதிய உயர்வுக்கு நிதிக் குழு இன்னும் ஒப்புதல் அளிககவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் ஐந்தாவது நிதிக் குழுவாவது இந்தப் பிரச்சினைகளையெல்லாம் கவனிக்கும் என்று நம்புகிறேன்."

## காவிரிப் பிரச்சினையில் தாமதம் ஏற்பட்டால்...

### எடுக்கவேண்டிய நடவடிக்கைபற்றி அனைத்துக் கட்சித் தலைவருடனும் கலந்தாலோசிப்பேன்

### மேலவையில் முதலமைச்சர் தந்த உறுதி

சென்னை, ஆக. 26—

'காவிரி நீர்ப் பங்கீடு பற்றிய தகராறில் உடன்பாடு ஏற்படுவதில் ஏதேனும் அனுவசியமான காலதாமதம் ஏற்பட்டால், மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் கூட்டிக் கலந்தாலோசிப்பேன் "

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று சட்டமன்ற மேலவையில் உறுதியளித்தார்.

காவிரி நீர்ப் பங்கீடு பற்றி உடன்பாடு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டால், அதனால் தமிழ்நாட்டிற்குத்தான் இழப்பு ஏற்படுமென்றும், மைசூர் மாத்திரம் தன்னுடைய புதிய அணைக்கட்டு வேலைகளை நடத்திக்கொண்டு போகிறது என்றும், இது தமிழ்நாட்டு நலன்களுக்குப் பாதகத்தை உண்டாக்கும் என்றும் தெரிவிக்கப்பட்ட ஐயப்பாடுகளைக் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்ட உறுதியை வெளியிட்டார்.

"மைசூர் அரசு கட்டும் அணைகள் பற்றித் தமிழகத்திற்கு ஆட்சேபனை இல்லை ; தமிழகத்திற்குரிய பங்கு -- அதன் நலன் -- அதன் உரிமைகள் ஆகியவைகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது என்பதுதான் நமது நிலை " என்று முதல்வர் சுட்டிக் காட்டினர்.

"இது சம்பந்தமாக மத்திய அரசு நியமித்த ஆய்வுக் குழு விரைவில் தமிழகத்திற்கு வரவிருக்கிறது ; இக்குழு தனது அறிக்கையை அளித்த பிறகு சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்கள் கூடிப் பேசுவார்கள் ; மேற்கொண்டு நடவடிக்கையை எடுத்துக் கொள்வார்கள்" என்று பொதுப்பணித்துறை அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

## காவிரி நீர் தகராறு

### தகவல் திரட்டும் குழுவின் அறிக்கை எப்போது கிடைக்கும் ?

### சட்டப் பேரவையில் அமைச்சர் எஸ் ஜே. சாதிக் பாட்சா தகவல்

சென்னை, ஆக. 26—

'காவிரி நீர்த் தகராறு மற்றிய விவரங்களைத் திரட்ட மத்திய அரசு அமைத்துள்ள குழு, தனது அறிக்கையை இந்த ஆண்டு டிசம்பர் 15-ந் தேதிக்குள் அளிக்க இயலாது எனத் தெரிவித்திருக்கிறது"

என்ற தகவலை சட்டப் பேரவையில் பொதுப் பணித்துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

இது சம்பந்தமாக கே. டி. கே. தங்கமணி கொண்டுவந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் சாதிக்பாட்சா, 'விவரங்கள் திரட்டும் குழுவிற்குத் தமிழக அரசு விவரங்களை அனுப்பி வைத்துவிட்டது' என்று கூறினர்.

'பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்துள்ள விவரங்களைப் பரிசீலனை செய்ய அவகாசம் வேண்டியிருப்பதால், இந்த ஆண்டு டிசம்பர் 15-ந் தேதிக்குள் அறிக்கையை அளிக்க முடியாது என்று குழு தெரிவித்திருக்கிறது" என்றும் அமைச்சர் கூறினர்.

"இக்குழு மீண்டும் அடுத்த மாதம் 6-ந் தேதியன்று தமிழ்நாட்டிற்கு வரவிருக்கிறது" என்றும் அமைச்சர் சொன்னர்.

# ஆசிரியர் பயிற்சியை நிறுத்தியது ஏன்?

## நாவலர் விளக்கம்

சென்னை, ஆக. 24—

"செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பயிற்சியை இந்த ஆண்டு நிறுத்தியதன் காரணமாகப் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; குறிப்பாகப் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்"

என்ற கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சட்டப் பேரவையில், கே. டி. கே. தங்கமணி கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்திற்குக் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் பதிலளிக்கையில் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் 129 இருக்கின்றன; அதில் அரசு நிறுவனங்கள் 72; தனியார் நிறுவனங்கள் 57.

ஏற்கனவே தமிழ்நாட்டில் 13,000 ஆசிரியர்கள் படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள்; இந்த ஆண்டு வரப்போகின்ற 10,000 பேரையும் சேர்த்தால் 23,000 பேர் வேலையின்றி இருப்பார்கள்.

இந்த ஆண்டு 2,000 ஆசிரியர்களுக்கும் புதிதாக வேலைவாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறோம்; ஓய்வு பெறுகிறவர்கள் 3,000 பேர் இருக்கக்கூடும்.

ஆக, ஓராண்டுக்கு 6,000 ஆசிரியர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடிகிறது; அடுத்த ஆண்டில் 16,800 பேர் வேலையில்லாமல் இருப்பார்கள்; ஆகவே, தேவைக்கேற்ப இந்த வேலைவாய்ப்புக்களை ஒழுங்குபடுத்துவது அவசியமாகிறது.

ஆந்திரத்தில் அடுத்த ஆண்டில் அந்தப் பயிற்சி இருக்காது என்று கூறுகிறார்கள்; 1974 ஏப்ரலில்தான் மீண்டும் ஆசிரியர் பயிற்சி நடைபெறும்.

இப்போதுள்ள நிலைமை பற்றி இவ்வாண்டு இறுதியில் மீண்டும் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்."

# தஞ்சை மாவட்டத்தில் பீர் தயாரிக்கும் தொழிற்சாலை

சென்னை, ஆக. 25—

"தஞ்சை மாவட்டத்தில் தனியார் துறையில் ஆண்டொன்றுக்கு சுமார் 60,000 ஹெக்டர் லிட்டர் 'பீர்' தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் மேலவையில் தெரிவித்தார்.

# 'தமிழ்நாட்டு பண்பாடு-கலாச்சாரப்படி ஓட்டல்கள் நடத்தப்பட வேண்டும்'

## 'பரிமாறுவோருக்குப் பயிற்சி அளிக்கத் தனிக் கல்லூரி அமைக்க இயலாது'

### அமைச்சர் க. இராசாராம் அறிவிப்பு

சென்னை, ஆக. 25—

"அயல் நாடுகளில் உள்ள ஓட்டல்களில் இளம் பெண்களைப் பரிமாறுவோராக வைத்து, வருவோரை இதமாக உபசரிக்கிறார்கள்; இங்கும் அப்படிச் செய்யும் எண்ணம் உண்டா?" என்று சட்டப் பேரவையில், கோவை செழியன் வினவினார்; அதற்கு, அமைச்சர் க. இராசாராம் அவர்கள், 'அவ்வாறு செய்யும் எண்ணம் இல்லை' என்று கூறிவிட்டு, மேலும் சுட்டிக்காட்டியதாவது:—

"தமிழ்நாட்டுக்கென்று தனிப் பண்பாடு — கலாச்சாரம் இருக்கிறது; வெளிநாட்டிலிருந்து வருகின்ற பயணிகளைக் கவருவதென்றால் — அங்கேயே அவர்கள் அப்படிப்பட்ட காட்சிகளைக் கண்டுவிட்டு வருவதால், நமது பண்பாடு — கலாச்சாரப்படிதான் ஓட்டல்கள் நடத்தப்பட வேண்டுமே அல்லாமல் உறுப்பினர் கருத்துப்படிச் செய்வது என்பது சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

என். கிட்டப்பா:—"பெரிய ஓட்டல்களை அரசுடைமையாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?"

அமைச்சர் க. இராசாராம்:—"இல்லை"

என். கிட்டப்பா:— "டில்லியில் அரசு அசோகா ஓட்டல் நடத்துவதுபோல் இங்கு 5 நட்சத்திர ஓட்டல்கள் அரசினரால் கட்டப்படுமா? 65 மாடி ஓட்டல் கட்டும் திட்டம் என்னவாயிற்று?

அமைச்சர்:—"அரசு ஓட்டல் நடத்தும் எண்ணம் இல்லை; 65 மாடிக் கட்டடம் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது."

சேள்வி:— "சென்னைக் கடற்கரையில் ஓட்டல் கட்டுவதாக இருந்த திட்டம் என்னவாயிற்று?"

அமைச்சர்:—"எலியட்ஸ் கடற்கரையில் அதற்காக இடம் வாங்கப்பட்டது; 5 நட்சத்திர ஓட்டல் கட்டுவதற்காகவே வாங்கப்பட்ட அந்த இடம் அப்படியே இருக்கிறது; யாராவது கேட்டால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்."

கோவை செழியன்:— "ஓட்டல்களில் பரிமாறுவோர் சரியாக நடப்பதில்லை என்றும், அதனாலேயே வருவாய் பாதிக்கப்படுவதாகவும் பேசப்படுகிறது; இதற்காக, பரிமாறுவோருக்குப் பயிற்சி அளிக்கத் தனிக் கல்லூரி அமைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா?"

அமைச்சர்:—"இல்லை."

# மதுக் கடைகள் ஏல விற்பனை முறை

சென்னை, ஆக. 24—

"மதுக் கடைகளை ஏலம்விடும் தற்போதைய முறைக்குப் பதிலாக அவற்றின் விற்பனையைக் கூட்டுறவுத் துறையின்கீழ் கொண்டுவரும் எண்ணம் இருக்கிறதா?"

என்று, சட்டப் பேரவையில் என். கே. பழனிச்சாமி (வலது கம்.) வினவினார்.

முதலமைச்சர்:—"அது இயலாத ஒன்று என்று எண்ணி மேற்கொள்ளவில்லை."

ஏ. சுப்பிரமணியம் (இ. காங்):— "தமிழ்நாட்டில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டதால், எந்த அளவுக்கு மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய ஏதேனும் ஆய்வுநடத்தப்பட்டதா?"

முதலமைச்சர்:— "உறுப்பினர் சார்ந்துள்ள கட்சி ஆட்சி செய்யும் மராட்டிய மாநிலத்தில் இப்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டிருக்கிறது; அங்கு மக்களின் வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறதோ அதைப்போன்றே இங்கும் இருக்கிறது."

நரசிம்மன் (தி.மு.க.):—"மதுவின் மொத்த விற்பனை அனுமதியைக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொடுக்கப்படுமா?"

முதலமைச்சர்:—"அப்படி எண்ணம் இல்லை."

# விரைவுப் பேருந்து போக்குவரத்து

## விரிவுபடுத்தப்படுகிறது

சென்னை, ஆக. 25—

மூன்று வழித் தடங்களில் (ரூட்களில்) விரைவுப் பேருந்துப் போக்குவரத்துக்களைத் தமிழக அரசு விரிவுபடுத்தியிருக்கிறது.

சென்னை — திருச்சி எக்ஸ்பிரஸ் பஸ் மதுரை வரையிலும், சேலம் — மதுரை பஸ் திருநெல்வேலி வரையிலும், சேலம் — தூத்துக்குடி பஸ் திருச்செந்தூர் வரை விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

சென்னை — கோவை 'ரூட்'டில் இப்போதுள்ள போக்குவரத்துக்கள் தவிர, மேலும் இரண்டு பஸ்கள் விடப்படும்.

# அரசுப் பணிகளில் சேர வயது வரம்பு உயர்வு

## 'பரிசீலனை செய்யப்படுகிறது' என முதலமைச்சர் தகவல்

சென்னை, ஆக. 25—

"தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேருவதற்கான வயது வரம்பை 25-லிருந்து 26 ஆக உயர்த்த வேண்டும் என்ற யோசனையை தமிழ்நாடு அரசு அலுவலர் தேர்வுக் குழு (பப்ளிக் சர்வீஸ் கமிஷன்) பரிசீலனை செய்து வருகிறது"

என்று சட்டப் பேரவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்; இது தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும் — முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

தேவேந்திரன் (தி. மு. க.):— 'தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கான வயது வரம்பை உயர்த்தும் எண்ணம்உண்டா?"

முதல்வர்:—"அரசாங்க வேலைகளுக்குக் குறைந்தபட்ச வயதை 25-லிருந்து 30-ஆக உயர்த்தும்படி 'செகட்' பதிவு பெறுத ஊழியர்கள் சங்கத்தின் வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் உள்ளது."

எச். வி ஹண்டே (சுதந்திரா):— "தற்காலிகமாக வேலையில் நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு வயது வரம்பில் சலுகை காட்டப்படுமா?"

முதல்வர்:—"மத்திய அரசு சர்வீஸ் கமிஷன், பரீட்சை எழுதுவோரின் குறைந்தபட்ச வயதை 24-லிருந்து 26-ஆக உயர்த்தியிருக்கிறது; அதேபோல் நாமும் குறைந்தபட்ச வயதை 25-லிருந்து 30-ஆக உயர்த்தலாமா என்று தமிழ்நாடு சர்வீஸ் கமிஷனை கேட்டோம்; அவர்கள், 'இயலாது' என்று கூறிவிட்டனர்; எனினும், மத்திய சர்வீசு கமிஷன் செய்துள்ளது போல் அரசு பணிகளில் சேருவதற்கான வயது வரம்பை 26-ஆக உயர்த்தலாமா என்பதை ஆராயும்படி அதனைக் கேட்டுக்கொண்டிருக்கிறது; அவர்கள் அதைப் பரிசீலித்து வருகிறார்கள்."

பொன்னம்ப நாடார் (ஸ. காங்.):— "கேரளத்தில் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு வயது 28 ஆக உயர்த்தியிருக்கிறார்கள்; இங்கும் அவ்வாறு செய்யப்படுமா?"

முதல்வர்:—"நமது மாநிலத்தில் பின்தங்கியோருக்கு வயது 25 என்று இருந்தால் — கூடுதல் கல்வி இருந்தால் — வயது வரம்பு இல்லை; தாழ்த்தப்பட்டவர்களுக்கு 30 வயது என்று இருந்தாலும் கூடுதல் கல்விக்கு வயது வரம்பு இல்லை; அத்துடன், பின்தங்கியவர்களுக்குத் தமிழ்நாடு சர்வீஸ் கமிஷன் பரீட்சைக்கு இருமுறை கட்டணமின்றிப் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டிருந்ததை இவ்வரசு மூன்று தடவையாக உயர்த்தியிருக்கிறது; தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கட்டணம் எதுவும் இல்லை."

வீராசாமி (தி. மு. க.):—"ஓய்வு பெறும் வயதையும் மாற்றியமைக்கும் எண்ணம் உண்டா?"

முதல்வர்:—"அப்படிப்பட்ட எண்ணம் இல்லை."

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு

# புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்

## ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்

திருச்சி, ஆக. 25

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் ஆறுதல் பரிசுகளையும் அளிப்பதற்குத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது பொதுமக்கள் ஆர்வத்துடன் பரிசுச் சீட்டுகளை வாங்கச் செய்யும் வகையில் இந்தப் புதிய பரிசுத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன்படி, ஒவ்வொரு வரிசைக்கும் ரூ. 1 இலட்சம் கொண்ட ஒரு முதல் பரிசு வழங்கப்படும். முதல் பரிசு பெற்ற எண்ணிற்கு முன்னால் உள்ள எண்ணையும் — பின்னால் உள்ள எண்ணையும் கொண்ட பரிசுச் சீட்டுகளுக்குத் தலா ரூ. 1,500 ஆறுதல் பரிசு அளிக்கப்படும்.

உதாரணமாக, 123456 என்னும் பரிசுச் சீட்டிற்கு ரூ. 1 இலட்சம் முதற் பரிசு கிடைத்ததாக வைத்துக்கொள்வோம்; அப்போது 123455, 123457 என்னும் எண்களைக் கொண்ட இரு பரிசுச் சீட்டுகளுக்கும் தலா ரூ. 1,500 கொண்ட ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

### இரண்டாவது பரிசு

ஒவ்வொரு வரிசைக்கும் தலா ரூ. 10,000 கொண்ட 2 இரண்டாம் பரிசுகள் தரப்படும்; இந்த இரண்டாம் பரிசுகள் பெற்ற பரிசுச் சீட்டுகளின் முந்தைய — பிந்தைய எண்களைக் கொண்ட 4 பரிசுச் சீட்டுகளுக்கும் தலா ரூ. 500 கொண்ட 4 ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்; அதாவது, 345678, 987654 என்னும், இரு பரிசுச் சீட்டுகளுக்குத் தலா 10,000 கொண்ட 2 இரண்டாம் பரிசுகள் கிடைப்பதாக வைத்துக்கொள்வோம்; அப்போது, 345677, 345679 — 987653, 987655 ஆகிய எண்களைக் கொண்ட பரிசுச் சீட்டுகளுக்கு தலா ரூ. 500 கொண்ட ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.

### மூன்றாவது பரிசு

ஒவ்வொரு வரிசைக்கும் தலா ரூ. 1,000 கொண்ட 75 மூன்றாம் பரிசுகள் அளிக்கப்படும்.

மற்றும் தலா ரூ. 500 கொண்ட 100 நான்காம் பரிசுகளும், தலா ரூ. 100 கொண்ட 500 ஐந்தாம் பரிசுகளும், தலா ரூ. 50 கொண்ட 1000 ஆறாம் பரிசுகளும் அளிக்கப்படும்.

இந்தப் புதிய பரிசுத் திட்டம் 30—9—72 அன்று நடக்கும் குலுக்கல் முதற்கொண்டு செயல்படுத்தப்படும்.

# மருந்துகளால் தொல்லை

அடிக்கடி மருந்துகளை உட்கொள்வதினால் நோய்க்கிருமிகளை எதிர்க்கும் உடலில் உள்ள கிருமிகள் வலிமையிழந்து விடுகின்றன; இதனால் அறுவைச் சிகிச்சை செய்கிறபோது மட்டும் இதனால் ஆபத்தான நிலை ஏற்பட்டுவிடுகிறது; ஏனென்றால், அடிக்கடி மருந்து உட்கொண்டு அதனால் உறுப்புகள் பலவீனமடைந்துவிடுகின்றன.

இக்கருத்தை ஜெர்மன் கூட்டாட்சி குடியரசில் உள்ள மூனிச் நகரில் நடந்த அறுவைச் சிகிச்சை பற்றிய மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் கூறினார்கள்.

அதனால், அடிக்கடி நோய்களுக்கு மருந்துகளை எழுதிக்கொடுப்பதை இனி டாக்டர்கள் மிகவும் கவனமாக — சிரத்தையாக செயல்படவேண்டுமென்று ஹைடம்பர்க் பல்கலைக் கழக மருத்துவமனையைச் சேர்ந்த எஸ். வைசோகி கூறினார்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

"திருவையாறு, வலிவலம் ஆகிய இடங்களில் நாதசுரப் பயிற்சிப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன; திருவையாற்றில் 23 மாணவர்களும், வலிவலத்தில் 17 மாணவர்களும் பயிற்சி பெறுகின்றனர்"

என்று என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் தெரிவித்தார்.

# உயர் நிலைப் பள்ளிகளில் போதிய அளவுக்கு மாணவர்கள் இல்லை

சென்னை, ஆக. 25—

"போதிய அளவுக்கு மாணவர்களின் எண்ணிக்கை இல்லாமல் தமிழ்நாட்டில் அறுபதுக்கும் மேற்பட்ட உயர் நிலைப் பள்ளிகள் இருக்கின்றன"

என்று கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன், சட்டப் பேரவையில், கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"மாநிலத்தில் 2,600-க்கும் சற்று அதிகமான உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன; இவற்றில் 60 முதல் 65 உயர்நிலைப் பள்ளிகளில் போதிய அளவுக்கு மாணவர்கள் இல்லை; ஒரு வகுப்பில் ஆறு அல்லது ஏழு மாணவர்கள்தான் இருக்கின்றனர்"

என்றும் அமைச்சர் சொன்னார்.

# தவறான செய்தி— மதுரை முத்து மறுப்பு

மதுரை மாவட்ட தி. மு. க. செயலாளரும் — தி. மு. க. மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவருமான திரு. எஸ். முத்து எம்.எல்.சி. அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"மதுரை மாவட்ட தி. மு. கழக 5-வது மாநாட்டை யொட்டி மதுரை மேல மாசி வீதியில் அமைக்கப்பட்டிருந்த உலக உருண்டை, மக்கள் மனத்தை விட்டு அகலாத நிகழ்ச்சியாக இருந்ததைப் பொதுமக்கள் அறிவர்.

மாநாடு முடிந்து — கடந்த ஞாயிறன்று அந்த உலக உருண்டையை 8 பேர் சேர்ந்து பிரித்துக் கொண்டிருக்கையில், கிழக்குப் பக்கமாக அது சாய்ந்தது.

போக்குவரத்து நிறுத்தப்பட்டு — பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏதுமின்றி உடனே பிரித்து அகற்றப்பட்டுவிட்டது.

உலக உருண்டை சாய்ந்ததால், யாருக்கும் அடிபட்டுக் காயம் ஏற்படவில்லை; எந்தவிதச் சேதமுமில்லை என்பதை மதுரை மக்கள் அறிவர்.

ஆகஸ்டு 20-ந் தேதி வெளியான 'தினமணி' ஏட்டில் 'இதை அகற்றிக் கொண்டிருக்கும்போது கீழே விழுந்துவிட்டது' என்று மட்டுமே செய்தி வெளியாகியிருக்கிறது.

உண்மை நிலை இவ்வாறிருக்க, ஆகஸ்டு 20-ம் நாள் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழில், 'உலக உருண்டையைப் பிரிக்கும்போது 4 பேருக்குக் காயம் ஏற்பட்டதாகப் பொய்யான செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இந்தச் செய்தி எப்படி வந்தது என்பது பற்றி விசாரித்தபோது, 'யு. என். ஐ. செய்தி நிறுவனம் தந்தது' என்கின்றனர்.

இவர்கள் தந்த அந்தச் செய்தியை சில தமிழ் நாளிதழ்களும் மூன்று பத்திச் செய்தியாக வெளியிட்டிருக்கின்றன. இதுதான் பத்திரிகை தர்மமா என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக இந்த மறுப்புச் செய்தியை வெளியிடுகின்றேன்."

# தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்கள்

சென்னை, ஆக. 26—

ஆகஸ்டு 9 ந் தேதியன்று தொடங்கிய சட்டப் பேரவையின் கூட்டம் நேற்றுடன் முடிவடைந்தது, அவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் மறுதேதி குறிப்பிடாமல் இக்கூட்டத் தொடரை காலவரையறையின்றி ஒத்திவைத்தார்.

15 நாட்கள் நடைபெற்ற சட்டப் பேரவையின் இக்கூட்டத் தொடரில், நில உச்சவரம்பு 4-வது திருத்தச் சட்டமும்—கல்லூரிகள் அறக்கட்டளைகள் ஆகியவற்றின் நிலங்களுக்கு உச்சவரம்பு ஏற்படுத்தும் திருத்தச் சட்டமும்—ஏழைகள் கடன் தொல்லையை நீக்க வகைசெய்யும் கடன் நிவாரணச் சட்டமும்—கோவில்களின் அறங்காவலர் குழுவில் தாழ்த்தப்பட்டோருக்கு இடமளிக்க வகைசெய்யும் இந்து அறநிலையத் திருத்தச் சட்டமும்—விவசாயிகள் கடன் தொல்லையைத் தீர்க்க வகைசெய்யும் வேளாண்மைக் கடன் நிவாரணச் சட்டமும் நிறைவேறின; மற்றும் நிறைவேற்றப்பட்ட திருத்தச் சட்டங்களின் விவரம் இங்கு தரப்படுகிறது:...

## உழவு தொழிலாளர் கூலி நிர்ணய மசோதா

சென்னை, ஆக. 25—

உழவுத் தொழிலாளர் நியாயக் கூலி (திருத்த) மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

கிழக்குத் தஞ்சையில் 6 தாலூக்காக்களில் உழவுத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய இம்மசோதா வகை செய்கிறது

ஏற்கனவே செயலில் இருந்த இச்சட்டம், இம்மாதம் 4-ந் தேதியுடன் காலாவதியாயிற்று; அதன் ஆயுட் காலத்தை மேலும் ஐந்து ஆண்டுகள் நீடிக்க அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது; அந்த அவசரச் சட்டத்துக்குப் பதிலாக இப்போது இம் மசோதா நிறைவேற்றப்பட்டது.

விவாதத்தின்போது பேசிய பெரும்பாலான உறுப்பினர்கள், 'இந்தச் சட்டம் மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் செயல்படுத்தப்படவேண்டும்' என்று வற்புறுத்தினர்.

"நியாயக்கூலி விகிதத்தை மூன்றுண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கச் சட்டத்தில் விதி செய்யப்பட வேண்டும்" என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

விவாதத்திற்குப் பதிலளிக்கை அமைச்சர் ப. உ. சண்முகம், 'மாநிலம் முழுவதற்குமாகக் கூலி நிர்ணய விகிதம் அமைப்பதற்கு விரிவான சட்டம் இயற்றும் நோக்கத்துடன் பல்வேறு மாநிலங்களில் உள்ள பயிர் — பொருளாதார நிலை பற்றி ஆராய ஒரு கமிஷன் நியமிப்பதற்கு அரசு வாக்களித்துள்ளது" என்றார்.

## சென்னை மாநகராட்சித் திருத்த மசோதா

சென்னை, ஆக. 25—

சென்னை மாநகராட்சியில் 3-வது பிரிவு — 4-வது பிரிவு ஊழியர்களை நியமிக்கும் அதிகாரத்தை, மாநகராட்சி கமிஷனரிடம் ஒப்படைக்கும் வகையில், 1919—மாநகராட்சி சட்டத்தின் 85-வது பிரிவைத் திருத்தம் செய்து சட்டம் நிறைவேறியது.

இதுவரையில் மேற்படி நியமனங்களை 'நியமனக் குழு' செய்து கொண்டிருந்தது.

"நியமனக் குழுவுக்கு இந்த அதிகாரம் தேவையில்லை; ஆணையாளரிடமே ஒப்படைத்துவிடலாம்" என்று சென்னை மாநகராட்சி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருப்பதாகவும், அரசாங்கம் அத்தீர்மானத்தை ஏற்று இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாகவும், திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து பேசுகையில் கல்வி — உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் விளக்கினார்.

## மதுரை மாநகராட்சிச் சட்டத் திருத்தம்

சென்னை, ஆக. 25—

1972-ம் ஆண்டு ஏப். 28-ந் தேதி வரை மதுரை மாநகராட்சியின் மேயர்—துணை மேயரின் பதவிக் காலத்தை நீடித்து, ஆண்டுத் தொடக்கத்தில் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம்—சட்டப் பேரவையில் மதுரை மாநகராட்சி சட்டத்தில் ஒரு திருத்தம் செய்நதன் மூலம்—முறைப்படுத்தப்பட்டுச் சட்டமாக நிறைவேறியது.

1971-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து மதுரை நகராட்சி மாநகராட்சியாக மாற்றப்பட்டதையொட்டி, அப்பொழுது நகராட்சியில் அங்கம் வகித்த உறுப்பினர்களின் பதவிக் காலமும் 1972 ஏப்ரல் 28-ம் நாள் முற்பகல் வரை நீடிக்கப்பட்டது; அதேபோன்று மேயர்—துணை மேயர் பதவிக் காலமும் அதே காலத்திற்கு நீடிக்கப்பட்டது; பின்னர் மதுரை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக் காலம் 1974-ம் ஆண்டுவரை நீடிக்க அரசு சட்டமியற்றியபோது 'ஆண்டுக்கொரு முறை மேயர்—துணை மேயர் பதவிகளுக்கு மட்டும் தேர்தல் நடத்தப்பட வேண்டும்' என்று அரசு முடிவு செய்தது.

நகராட்சியின் உறுப்பினர்களின் பதவிக் காலம் 1974-ம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டாலும், மேயர்—துணை மேயர்கள் பதவிக் காலம் 28—4—72 முற்பகலுடன் சட்டப்படி முடிவடையும்' என்ற ஒரு சந்தேகம் எழும்பியதால் ஒரு அவசரச் சட்டம் மூலம், '1973 ஏப்ரல் 28 வரை பதவியில் நீடிக்கலாம்' என்று உத்தரவாயிற்று; இப்போது ஒரு திருத்தச் சட்டத்தின் மூலம் சட்ட வடிவமாகிறது.

## பொதுக் கட்டடங்கள் திருத்த மசோதா

சென்னை, ஆக. 25—

தமிழ்நாடு 1972-ம் ஆண்டு பொதுக் கட்டடங்கள் (உரிமம் வழங்குதல்) திருத்த மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

"1965-ம் ஆண்டு மதுரையில் பள்ளிக் கட்டடம் இடிந்து விழுந்ததையடுத்து, 'பொதுக் கட்டடங்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்' என்ற கருத்தில் பாதுகாப்பாக உள்ள கட்டடங்களுக்கு லைசென்சு வழங்கும் சட்டம் 1966ல் செயலுக்கு வந்தது; இச்சட்டத்தினால், சிறு கடைக்காரர்களும்— சிறிய கட்டட உரிமையாளர்களும் பாதிக்கப்படுவதாக அரசுக்கு முறையீடு வந்ததன் மீது இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது" என்று மசோதாவைத் தாக்கல் செய்த கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறினார்.

"பள்ளிகள்—உணவு விடுதிகள்— நூல் நிலையம்—மருத்துவ மனைகள்— நர்சிங் ஹோம்—கிளப்புகள்—தங்கும் விடுதிகள்—சத்திரங்கள் ஆகியவை பொதுக் கட்டடங்கள் என்று மசோதாவில் வரையறை செய்யப்பட்டுள்ளது" என்றும் அவர் சொன்னார்.

## விளை நிலங்கள் குத்தகை உரிமை

### ஆவண திருத்த மசோதா

சென்னை, ஆக. 25—

விவசாய நிலங்கள்—குத்தகை உரிமைகள் ஆவண திருத்த மசோதாவும் சட்டப் பேரவையில் நிறைவேறியது.

மாநிலமெங்கிலும் உள்ள விவசாய விளை நிலங்களில் குத்தகை உரிமைகளை வரையறுத்துப் பதிவு செய்ய மசோதா வகை செய்கிறது.

பதிவு அதிகாரி, மனுவின் மீது மட்டுமன்றித் தாமாகவே விசாரணை நடத்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

பதிவு அதிகாரியின் முடிவை ஆட்சேபித்து இச்சட்டத்தின்கீழ் சிவில் நீதிமன்றங்களுக்குச் சிலர் சென்றுவிடுவதால், சட்டத்தின் நடைமுறை தாமதப்படுகிறது; இக்குறையை நீக்கும்பொருட்டு இச்சட்டத்தின்கீழ் சிவில் நீதிமன்றங்களுக்குச் செல்லும் உரிமை தடை செய்யப்படுகிறது.

## மன்னர்களுக்குரிய நிலங்களை மாற்றும் சட்டம்

கன்னியாகுமரி ஸ்ரீபாதம் நிலங்கள் ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல் மசோதாவும் நிறைவேறியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மன்னர்களுக்குச் சொந்தமான நிலங்களை ரயத்துவாரியாக மாற்றுவதற்கு இந்தத் திருத்த மசோதா வகை செய்கிறது.

இந்தச் சட்டத்தின் மூலம் அரசு கைப்பற்றும் நிலம் மொத்தம் 388 ஏக்கர் 39 செண்டுகளாகும்.

இந்தத் துறையில் வேலை இழப்பவர்கள், எங்கெங்கு வேலைவாய்ப்பு கிடைக்குமோ அங்கெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

## விற்பனைவரி திருத்த மசோதா

### அமைச்சர் ப.உ. சண்முகம் நிலைமை விளக்கம்

சென்னை, ஆக. 25—

பொது விற்பனை வரி திருத்த மசோதா சட்டப் பேரவையில் வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"விவசாயிகள் தங்கள் நிலத்தில் விளைந்த சொந்தப் பொருள்களை கொண்டு செல்லும் போதுசோதனைச் சாவடிகளில் எந்தவிதத் தடங்கலும் இருக்காது.

'ரூ. 25,000 ரூபாய் வரை விற்பனை வரியில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது; இதை உயர்த்த வேண்டும்' என்று கூறப்பட்டது.

"ரூ. 15,000 என்றிருந்ததை ரூ. ரூ. 25,000 என்று கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் உயர்த்தினோம்; இதனால் அரசுக்கு ரூ. 45 இலட்சம் இழப்பாகும்.

'முதல் ரூ. 25,000-த்திற்கு வரி போடக் கூடாது' என்றார்கள்; அதை ஏற்பதற்கில்லை.

வியாபாரிகள்கூட ரூ. 25,000 வரை சலுகை தந்திருப்பதை வரவேற்றிருக்கிறார்கள்; அரசுக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள்.

அதிகாரிகளுக்குச் சில வரம்புகளைத் தந்திருக்கிறோம்; அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு எந்தவிதத் தொந்தரவும் ஏற்படாது.

அதிகாரிகள் எதைச் செய்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறுவதாகக் கருதக் கூடாது; அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களைத் திருத்தவும் — கண்காணிக்கவும் அதிகாரம் இருக்கவேண்டும்; அப்போதுதான் சட்ட வரம்புக்கு உட்பட்டு பணியாற்றுவார்கள்.

லாரிகளில் வரும் பொருட்களை அப்படியே நிறுத்தி விடுகிறோம் என்பதல்ல — இரசீது கேட்கிறோம்; வரி செலுத்தி இரசீது கட்டிவிட்டால் எடுத்துச் சென்றுவிடலாம்.

இந்தத் துறை அதிகாரிகள் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியிருக்கிறார்கள்; அதனால் கடந்த ஆண்டு ரூ.1.10 கோடிக்கு வருமானம் கிடைத்திருப்பதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்தவேண்டும்."

## பொறுக்குக் குழு பரிசீலனைக்கு

### விடப்பட்ட மசோதாக்கள்

இந்த மசோதாக்கள் தவிர, வேளாண்மை விற்பனைவரி திருத்த மசோதா — தனியார் பள்ளிக் கூடங்களை முறைப்படுத்தும் மசோதா — கட்டடங்கள் குத்தகை வாடகைக் கட்டுப்பாடு மசோதா ஆகியவைகள் விவாதிக்கப்பட்டு, சட்டப் பேரவை — மேலவை உறுப்பினர்களைக் கொண்ட பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன.

கூட்டும் பொறுக்குக் குழுவில், சட்டப் பேரவையிலிருந்து 16 உறுப்பினர்களும் — மேலவையிலிருந்து 8 பேர்களும் ஆக 24 பேர் அங்கம் வகிப்பர்.

# கலைவிழாக்களில் ஆபாச நடனங்கள்

## முழுமையாகத் தடுக்க முன்னோடித் திட்டம்

### தீவிர நடவடிக்கைகள்பற்றி முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, ஆக. 25—

"இப்போதெல்லாம் கலைநிகழ்ச்சி மட்டுமல்லாமல், திரைப் படங்களிலும் பெரும் அளவில் ஆபாசம் இருக்கிறதே — ஆபாசம் என்றால் என்ன என்பதைப்பற்றி கோஸ்லா தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு ஓர் அறிக்கையைக் கொடுத்திருந்தார்களே— அதன்மீது இந்த அரசின் நிலை என்ன?"

என்று சட்டமன்ற மேலவையில் பலராமன் (ப. காங்கிரசு) வினவினார்.

முதலமைச்சர்:—"திரைப் படங்களில் ஆபாசம் எதுவும் இருந்தால் அதைக் கண்காணிக்க மத்திய தணிக்கைக் குழு இருக்கிறது; ஆகவே, அந்தப் பிரச்சினை 'கலை விழாக்களில் ஆபாசம்' பற்றிய பிரச்சினைகளில் வரவில்லை."

வெள்ளப்பாண்டியன் (ப. காங்)— "கலை விழாக்களில் பெரும் அளவில் ஆபாச நடனங்கள் நடக்கின்றன; கோவில் திருவிழாக்களில் ஆபாச நடனங்கள் நடத்தப்படுகின்றன; இங்கிலாந்து நாட்டில் இப்படிப்பட்ட ஆபாச நடனங்கள் நடப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்; அதேபோல் இங்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா?"

அவைத் தலைவர் சி. பி. சிற்றரசு (குறுக்கிட்டு):—"இந்தக் கேள்வியைக் கேட்பதற்குள்ளேயே சிரிக்கிறீர்களே — நேரில் பார்த்தால் எப்படிச் சிரிப்பீர்களோ!"

முதல்வர்:—"பொதுவாகக் கலை நிகழ்ச்சி போன்ற பொது இடங்களில் ஆபாச நடனங்கள் நடத்தப்படுவது குறித்துக் கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி போலீசாருக்கு உத்தரவிட்டிருக்கிறோம்; அவர்களும் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்."

வி. வெங்கா (தி மு.க.):—"பொது இடங்களில் அல்லாமல் தனிபார் இடங்களில் கற்புக்குப் பங்கம் இல்லாமல் நடனம் ஆடினால் அது ஆபாசமா?"

முதல்வர்:—"சொந்த விஷயத்தில் தலையிட விரும்பவில்லை."

சி வி. இராசகோபால் (தி.மு.க.)— "இதனால் பரத நாட்டியத்துக்குக்கூட ஆபத்து வரும்போல் இருக்கிறதே!"

முதல்வர்:— "பரத நாட்டியத்துக்கு ஆபத்து இல்லை; 'பாதக' நாட்டியத்துக்குத்தான் ஆபத்து."

ஜெயராம ரெட்டியார் (இ.காங்):— "சென்னை நகரில் பல ஓட்டல்களில் இப்படி ஆபாச நடனங்கள் நடத்தப்படுவதாகக் கேள்விப்படுகிறேன் — உண்மையா?"

முதல்வர்:— "கேள்விப்பட்டால் போதாது; உண்மையா என்று பார்த்துச் சொன்னால் நடவடிக்கை எடுக்க இயலும்."

அப்துல்வஹாப் (லீக்):—"சென்னை நகரில் கடந்த சனவரி மாதம் நடந்த கலைநிகழ்ச்சிகளில் ஆபாச நடனம் ஆடியதற்காக 12 பெண்கள் தண்டிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது; அதில் ஒரு சிலரே திரும்பத் திரும்ப இத்தகைய நடனம் ஆடித் தண்டிக்கப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?"

முதல்வர்:— "அப்படி நடனம் ஆடுபவர்களுக்கு ரூ 15—ரூ. 30 என்றுதான் அபராதம் விதிக்கப்படுகிறது; அதையும் அந்த நடனத்தை ஏற்பாடு செய்தவர்களே கட்டி விடுகிறார்கள்; அதனால் ஒரு சிலர் திரும்பத் திரும்ப தண்டிக்கப்படுகிறார்கள்.

"இதுபற்றி மதுரையில் நான் ஏற்கனவே அறிவித்தபடி மாவட்டக் கலெக்டரும் — மாவட்டப் போலீசு அதிகாரியும் கலந்து பேசி இப்படிப்பட்ட நடனங்களுக்கு அனுமதி கொடுப்பதற்கு முன்னால் நடனத்தை ஏற்பாடு செய்தவர் ரூ 5,000 அல்லது ரூ. 10,000 என்று ஒரு குறிப்பிட்ட தொகையை முன்பணமாகக் கட்டிவிட வேண்டும்; பிறகு அங்கு ஆபாச நடனம் ஆடியதாகத் தெரிந்து தண்டிக்கப்பட்டால், அந்த முன்பணம் முழுவதும் பறிமுதல் செய்யப்படும் என்று சொல்லியிருந்தேன்; அந்த முறை இப்போது கையாளப்படுகிறது; இப்படிச் செய்வதன்மூலம் ஆபாச நடனத்தை முழுமையாகத் தடுக்க இது முன்னோடியாக இருக்கும்."

# கடலில் உயிரிழந்த மீனவர் குடும்பத்துக்கு மானியத் தொகை

சென்னை, ஆக. 26—

கடலில் உயிரிழந்த மீனவர் குடும்பத்துக்காகக் கருணை மனுக்கள் தரப்பட்டு — மானியமாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 53,000 ஆகும்.

இந்தத் தகவலை அரிசன நலத் துறை அமைச்சர் சத்தியவாணி முத்து அவர்கள், சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

"1971—72-ல், கருணை மானியம் கோரி 50 விண்ணப்பங்கள் வந்தன; ரூ. 53,000 கருணை மானியத் தொகையாக அளிக்கப்பட்டது" என்று அமைச்சர் தெரிவித்தார்.

# நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

**28--8--72**

**கோவில்பட்டி**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: என். சுப்பையா; வரவேற்புரை: வி. ரோஸ்; பேசுவோர்: திருவாரூர் கே. தங்கராசு, வீ. சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ., என். நல்லுசாமி, நா. வெங்குசாமி, என். செயராமன், ஏ. ஆண்டியப்பான், ஏ. பி. இராசு, எம். இரகமதுல்லா, பி. எஸ். இளஞ்செல்வன், டி. ஆர். கிட்டுபா, மாறன், கே. திருப்பதி, தமிழ்ச்செல்வன், எஸ். ஆறுமுகம், டி. ஏ. பழனியப்பா.

## திருச்சி வட்டத்தில் தொழில் அமைச்சர்

நிகழ்ச்சிகள்

28—8—72-ல் தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள், திருச்சி வட்டத்தில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிருர்; அவருடன் அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம், வட்டச் செயலாளர் மு. நடராசன், கு. காமாட்சி எம்.எல்.ஏ., எஸ். ஏ. ஜி. ராபி (திருச்சி நகரச் செயலாளர்) ஆகியோரும் கலந்துகொள்கின்றனர்.

காலை 9-30 மணி: சீராத்தோப்பு தி. மு. க. செயலாளரும், மருதாண்டக்குறிச்சி ஊராட்சித் தலைவருமான செல்வன்: அண்ணுவி -- செல்வி: விமலாதேவி திருமணம்.

மாலை 4-மணி: திருச்சி மின்சார வாரியம் கணக்காயர் சங்க வரவேற்பு.

மாலை 6-30 மணி: சின்னுலம்பட்டியில் மின்விளக்கு ஏற்று விழா -- தந்தை பெரியார் அவர்களும் கலந்துகொள்கிருர்கள்.

இரவு 8-மணி: திருச்சி உலகநாதபுரத்தில் தி. மு. க. பொதுக் கூட்டம்.

அறநிலைய அமைச்சர்

## மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

ஆக. 27 காலை 9 மணி: ஜிகாளியாபுரம்; 10 மணி: முன்னுள இராணுவத்தினா அணிவகுப்பும் -- மருசுகதிப்பும் (சிதம்பரம் பூங்கா, கோவை); பிற்பகல் 4 மணி: காட்டூர்—விஞயகர், சுப்பிரமணியர், மாரியம்மன் திருக்கோயில்கள் திருமண மண்டபக் கால்கோள் விழா.

ஆக. 28 காலை 6-45 மணி: சூலூர்; 8-30 மணி: கோவை; மாலை 4 மணி: சூலூர் ஊராட்சி ஒன்றியம் வரவேறபு; 5 மணி: செங்குத்துறை—தொடக்கப் பாடசாலை கட்டடத் திறப்பு.

## திருமணம்

28—8—72 காலை 10 மணியளவில, குறிஞ்சிப்பாடி -- எல்லைக்கல் எஸ். கே. என். கம்பெனியில், செல்வன்: தட்சணுமூர்த்தி -- செல்வி: புஷ்பா திருமணம், அமைச்சா நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையிலும் -- அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் முன்னிலையிலும் நடைபெறும்; வாழ்த்துரை வழங்குவோர்: காஞ்சி கல்யாணசுந்தரம் எம்.பி., இரா. சாம்பசிவம் எம்.எல்.சி., எம். செல்வராஜ் எம்.எல்.ஏ., என். இராசாங்கம எம்.எல்.ஏ., பொன். சொக்கலிங்கம்எம்.எல்.எ., வி. வி. சுவாமிநாதன் எம்.பி., ஏ. வி. தண்டபாணி, கு. த. பெ. பழனியப்பன்.

வேளாண்மைத் துறை அமைச்சர்

## மன்னை நாராயணசாமி

நிகழ்ச்சிகள்

ஆக. 27 காலை 9 மணி: பட்டுக்கோட்டை.

ஆக. 28, 29: மன்னுர்குடி.

ஆக. 29 காலை: தஞ்சாவூர்—திருமணம்; மாலை 4 மணி: மன்ணுர்குடி—தஞ்சை மாவட்ட விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழா; 6 மணி: மன்ணுர்குடி—சப்-டிவிஷனல் மாஜிஸ்திரேட் நீதிமன்றத் திறப்பு; இரவு 7 மணி: நீடாமங்கலம்—பொதுக்கூட்டம்.

ஆக. 31 தஞ்சாவூர்.

செப். 1 காலை 10 மணி: சிவகங்கை—டாக்சி வழங்குதல்; 11-30 மணி: நகர்மன்றவரவேற்பு; மாலை 3-மணி: ஆர். டி. எம். கல்லூரி சரித்திர சங்க துவக்க விழா; 5 மணி: மதுரை—கருத்தரங்கு (சூரியகாந்திப் பூ).

செப். 2 காலை: விருதுநகர்—திரு. ஜெயராம ரெட்டியார் எம். எல். சி. ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகளில்கலந்துகொள்ளுதல்; பிற்பகல்: சிங்கம்புணரி; மாலை: தேவகோட்டை ஒன்றியம்; இரவு: தேவகோட்டை—பொதுக்கூட்டம்.

செப். 3 மன்ணுர்குடி.

செப். 4 காலை 9 மணி: காரிக்கோட்டை—திருமணம்; 11 மணி: கொரடாச்சேரி -- திரு கோவிந்தராசு இல்லத் திருமணம்; இரவு 8 மணி: தஞ்சாவூர்—தஞ்சை மாவட்ட உதவி பொறியாளர்கள் சங்க வரவேற்பு.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

## ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

ஆக. 27 காலை 7 மணி: முருகன்குடி; 8-30 மணி: தொளார் குடிகாடு; 10 மணி: ஜெயங்கொண்டம்; மாலை 5 மணி கடலூரில் நடைபெறும் முன்னுள் இராணுவ வீரர்கள் விழாவில் கலந்து கொள்ளல்.

ஆக. 28 காலை 6 மணி: கோரணப்பட்டு; 9 மணி: புலியூர்; 10 மணி: குறிஞ்சிப்பாடி; மாலை 3 மணி: குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு 7 மணி: குறிஞ்சிப்பாடி பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

# 'விதைப்பு இல்லையே' என்றபதைப்புகூடாது

# மழை பொய்த்துவிடுமானல் இராணுவத்தினரைப் போல் மாறி தீவிரமாகச் செயல்படுவோம்

சென்னை, ஆக. 26—

"எதிர்க் கட்சித் தலைவர், 'அவை கலையப்போகிறது -- மழை இல்லாத சூழ்நிலை இருக்கிறது' என்றெல்லாம் சொன்னர்; அவை கலைந்து அவரவர்கள் ஊருக்குச் சென்றல் -- நல்லவர்களெல்லாம் ஊருக்குப் போன பிறகு ஆங்காங்கே மழை பொழியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்; இப்போது சென்னையிலே மழை பொழிவதற்குக் காரணம், நாமெல்லாம் இங்கு இருப்பது தான்; ஆகவே அவரவர்கள் அவரவர்களுடைய ஊருக்குச் சென்றதும் நல்ல மழை பெய்யும் என்று நம்பலாம்.

"இப்போது 'விதைப்பு இல்லையே' என்று வருத்தப்பட்டார்கள்; 'விதைப்பு இல்லையே' என்ற பதைப்பு கொள்ளத் தேவையிருக்காது என்று நிச்சயமாக நான் கருதுகிறேன்; அதைப்போலவே குடிநீர்ப் பஞ்சமும் -- வரவிருக்கின்ற காலம் மழைக் காலம் என்கின்ற காரணத்தால் -- நீங்கிவிடும் என்று நம்புகிறேன்.

"அப்படி மழை பொய்த்துவிடுமேயானும், வறட்சி வந்த நேரத்தில் எல்லாம் இந்த அரசு ஓர் இராணுவ நிலையைப்போலப் பணியாற்றியதோ அப்படியே இந்த நேரத்தையும் எண்ணித் தீவிரமாகப் பணியாற்றும்; எனினும், இப்படிப்பட்ட சிரமங்கள் வராமல் அரசு முன்னேற்பாடான நடவடிக்கைகளை எடுக்கும்; அப்படி எடுக்கின்ற நேரத்தில் யாரும், மத்திய அரசிடத்தில், 'இங்கு ஒன்றும் வறட்சி இல்லை; பணம் தரவேண்டாம்' என்று கூருமல் இருந்தால் அது போதுமானது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'ஏனென்றல், முன்பு இங்கு வறட்சி ஏற்பட்டபோது, தலைமை அமைச்சர் வருவதாகச் சொன்ன நேரத்தில், 'திட்டுத் திட்டாக இங்கு பச்சைகள் இருக்கிறது; இங்கு வளமாகவே இருக்கிறது; எதற்குத் தலைமையமைச்சர் வரவேண்டும்?' என்றெல்லாம் கேட்டனர்; 'வரவேண்டாம்' என்றும் சொன்ஞர்கள்; ஆனல், அந்தத் தாய் உள்ளம் அதையெல்லாம் கேட்காமல் -- மிகுந்த இரக்க உணர்ச்சியோடு இந்திரா காந்தி இங்கு வந்து -- வறண்டு கிடந்த பகுதிகளையெல்லாம் பார்த்து, தமிழ்நாட்டினுடைய தேவைக்கு ஏற்ப -- நம்முடைய வற்புறுத்தலுக்கு ஏற்ப தக்கது செய்தார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை!"

—முதலமைச்சர் கலைஞர்

(சட்டமன்ற மேலவையில்)

# 'சவுக்கடி' அலுவலகம் தாக்குதலுக்குள்ளாயிற்று

## வன்முறைக்கும்பலின் வெறியாட்டம்

சென்னை, ஆக. 26—

சென்னையிலிருந்து வெளிவரும் 'சவுக்கடி' என்ற நாளேடு அலுவலகம் நேற்று பிற்பகல் 12-30 மணியளவில் தாக்குதலுக்கு உள்ளாயிற்று.

சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் என்று கூறப்படுவோரும், சிண்டிகேட் -- கம்யூனிஸ்டுக் குண்டர்களும் சுமார் மூவாயிரம் பேர் சேர்ந்துகொண்டு அலுவலகத்தைத் தாக்கியிருக்கிருர்கள்.

பூட்டிய அலுவலகக் கதவுகளை உடைத்துத் தூள் தூளாக்கி விட்டு--உள்ளே நுழைந்து மின் விளக்குகளையெல்லாம் உடைத்துள்ளனர்.

அச்சடிப்பதற்கு வைத்திருந்த 250 ரீம் காகிதத்தை--ஏறக்குறைய ரூ. 8,000 பெறக்கூடியதை--நடுத்தெருவிலே கொண்டு வந்து போட்டுப் பெட்ரோலை ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தியிருக்கின்றனர்.

சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பில் அலுவலகத்திலிருந்த அச்சுக்கேசுகள்--ஸ்டாண்டுகள்--அச்சு எழுத்துகள்--அச்சகப் பொருள்கள் அனைத்தையும் கொண்டுவந்து போட்டுக் கொளுத்தியிருக்கின்றனர்.

அலுவலகத்துக்குள்ளே இருந்த வானொலிப் பெட்டி--கடிகாரம்--மேசைகள்--நாற்காலிகள்--பெஞ்சுகள் அத்தனையையும் நெருப்பில் போட்டுக் கருக்கிவிட்டனர்.

தகவலறிந்ததும் போலீசுக் கமிஷனர் ஷெனய்--டிப்டி கமிஷனர் மற்றும் போலீசு அதிகாரிகள் வந்து தாக்குதலுக்குள்ளான 'சவுக்கடி' அலுவலகத்தைப் பார்வையிட்டுப் படம் பிடித்துச் சென்றிருக்கின்றனர்.

திட்டமிட்டுத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் வெறியர்களின் செயலால் ரூ. 30,000 மதிப்புள்ள சொத்துக்கள் நாசமாக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## நாதசுரப் பயிற்சி பெறும் மாணவர்கட்கு இலவச வசதிகள்

சென்னை, ஆக. 26—

"நாதசுரப் பள்ளிகளில் பயிற்சி பெறும் மாணவர்கட்கு அரசு இலவச உணவு -- உடை -- தங்கும் வசதிகள் செய்து தருகிறது; தனியாக மாணவர்கட்கு உதவிப் பணம் எதுவும் வழங்கப்படுவதில்லை.

"பயிற்சி பெறும் மாணவர்கட்குக் கல்வி முடிந்ததும் பட்டங்கள் தரப்படுகின்றன; நாதசுரப் பயிற்சி பெற்றவர்கட்கு, 'நாதசுர இசை மணி' என்றும், தவில் வாத்தியப் பயிற்சி பெற்றவர்கட்கு, 'தவில் நாதமணி' என்றும் பட்டங்கள் வழங்கப்படுகின்றன."

இந்தத் தகவல்களை, அறநிலைய அமைச்சர் மு. கண்ணப்பன், சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

ஆக. 29 காலை 10 மணி: காரைக்குடி முனி வாசல் பள்ளிக் கூட அடிக்கல் நாட்டுவிழா; மாலை 4 மணி: தேவக்கோட்டை நகராட்சி குடிநீர் தொட்டி திறப்பு; 5-30 மணி: காரைக்குடி நகராட்சி சுதந்தரநாள் வெள்ளி விழா நினைவுக் கட்டிடக் கடைகள் திறப்பு; இரவு 7மணி: காரைக்குடி பொதுத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம்.

செப். 31 காலை 9 மணி: கரூர் கோ-ஆப்டெக்ஸ் நெசவாளர் வரவேற்பு; 10 மணி: கரூர் கைத்தறி நெசவாளர் மாநாடு; மாலை 6 மணி: கரூர் பொதுமக்கள் வரவேற்பு.

பொதுப்பணித் துறை அமைச்சர்

## எஸ்.ஜே. சாதிக் பாட்சா

நிகழ்ச்சிகள்

ஆக. 27 காலை 10 மணி: காட்டுப்புத்தூர்.

ஆக. 28 அமைச்சர் கா. இராசாராம் அவர்களுடன் இராசிபுரம் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

ஆக 29: வாணியம்பாடி தொகுதி—காலை 8-30 மணி: கிரிசமுத்திரம் ஊராட்சி வரவேற்பு; 9 மணி: வளையாம்பட்டு தொடக்கப்பள்ளிக் கட்டடத் திறப்பு; 10 மணி: பலுகூர்பல்லிதுரை தருமலிங்கம் நீர்த்தேக்கம் துவக்க விழா; 11 மணி: பீ. நாயக்கனூர் தொடக்கப்பள்ளிக் கட்டடத்திறப்பு; நண்பகல்12 மணி: மத்திய அரசின் காவலூர வான ஆராய்ச்சி நிலையம் பார்வையிடுதல்; பிற்பகல் 3 மணி: செள்ளைக் குட்டை ஊராட்சி வரவேற்பு; மாலை 4 மணி ஈச்சங்கால் தொடக்கப்பள்ளிக் கட்டடத் திறப்பு; 6-30 மணி: ஜாப்ராபாத் ஊராட்சி வரவேற்பு; இரவு 7-30 மணி: பொதுமக்கள் வரவேற்பு.

ஆக. 30 காலை 8-30 மணி: ஏலகிரிமலை ஊராட்சி வரவேற்பு; 9-30 மணி: பொன்னேரி ஊராட்சி வரவேற்பு--துணைக் குடும்பநல விடுதி திறப்பு; 10-30 மணி: புல்லூர் அணைக்கட்டுத் திட்டம் பார்வையிடுதல்; நண்பகல் 12 மணி: பாலாறு மேம்பாலம் திட்டம் பார்வையிடுதல்; பிற்பகல் 3 மணி: ஆண்டியப்பனூர் சீரணிப் பேருந்து நிலையம் திறப்பு; 3-30 மணி: பாம்பாறு அணைக்கட்டுத் திட்டம் பார்வையிடுதல்; மாலை 5 மணி: ஐக்காம் பாறை நீர்த்தேக்கம் திட்டம் பார்வையிடுதல்; 6 மணி: பொது மக்கள் வரவேற்பு.

## சின்னுளப்பட்டியில் மின் விளக்கு ஏற்று விழா -- சீரணி கட்டடத் திறப்பு

28—8—72 மாலை 6-மணிக்கு திருச்சி வட்டம் மணிகண்டம் ஒன்றியம் இனம்குளத்தூர் ஊராட்சி சின்னுலம்பட்டியில் மேற்படி விழா நடைபெறும்; தலைவர்: அன்பில் தர்மலிங்கம் எம்.எல்.ஏ.; மின் விளக்கு ஏற்றுதல்: தந்தை பெரியார்; நீர்ப்பாசன பம்புசெட்டு இயக்குதல்: அமைச்சர் செ. மாதவன்; சீரணிக் கட்டடத் திறப்பு: கு. காமாட்சி எம்.எல்.ஏ.; அண்ணு படத் திறப்பு: மு. நடராசன்; வரவேற்புரை: சூசை உடையார், இக்பால் அகமது; சிறப்புரை: எம். எஸ். வெங்கடாசலம், ஏ. வி. கிருஷ்ணமூர்த்தி, கே. எம். சுப்பிரமணியம், எஸ். ஏ. ஜி. ராபி, வ. இராமையா; நன்றியுரை: பொ. குன்னமன்.

சட்டப் பேரவை உறுப்பினர்

## என். கிட்டப்பா அன்னையார் மறைவு

மாயூரம், ஆக. 26—

மாயூரம் தொகுதி சட்டமன்ற தி. மு. கழக உறுப்பினர் என். கிட்டப்பா அவர்களின் அன்னையார் அஞ்சலையம்மாள் நேற்றிரவு இயற்கையெய்தியதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவிக்கிறேம்.

அன்னையார் மறைவால் துயருறும் கிட்டப்பா அவர்களுக்கும் -- அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

— ஆசிரியர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]